22.08.2024

O.S.No.254/2009

பிவா.சா.3.திரு.ராஜா த.பெ. பொன்ராஜ்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**11, 12** பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் கிரையம் வாங்கிய சொத்தின் மொத்த விஸ்தீரணம் 45 செண்டு ஆகும். அந்த சொத்து சர்வே எண்.158/1ல் கட்டுப்பட்ட சொத்தாகும். மேற்படி சர்வே எண்.158/1ல் கட்டுப்பட்ட மொத்தம் விஸ்தீரணம் 1 ஏக்கர் 80 செண்டு ஆகும். அதில் நான் 45 செண்டு கிரையம் பெற்றது போக காளீஸ்வரன் 90 செண்டும், சந்திவீரன் 45 செண்டும் கிரையம் பெற்றார்கள். மேற்படி சந்திவீரன் எனது உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். சந்திவீரன் தற்போது உயிருடன் இல்லை. தாவா வழக்கு பற்றி சந்திவீரன் வாரிசுதாரர்களுக்கு எதுவும் தெரியாது. அவர் உயிருடன் இருந்தபோது எங்களுக்கும், அவருக்கும் பேச்சுவார்த்தை இருந்தது, அவர் இறந்த பின்னிட்டு அவரது குடும்பத்தினருக்கும், எங்களுக்கும் பேச்சுவார்த்தை இல்லை. சந்திவீரன் உயிருடன் இருந்த காலத்தில் தாவா சம்பந்தமான எந்த விவரமும் அவருக்கு தெரியாது.

2. நான் 23.03.2007 தேதியில் கிரையம் பெற்றேன். அன்றைய தேதியில்தான் எனது சகோதர் சந்திவீரனுக்கும் கிரையம் செய்து கொடுக்கப்பட்டுது என்றால் சரிதான், கிரையம் வாங்கியதும் நாங்கள் தாவா சொத்தினை சென்று பார்வையிட்டு முள்கம்பி வேலிகள் அமைத்திருந்தோம். கிரையம் கொடுத்தவர்கள் அன்றைய தேதியிலேயே கிரைய சொத்தின் சுவாதீனத்தினை எங்கள் வசம் ஒப்படைத்து விட்டார்கள். சர்வே எண்.158/1ல் கட்டுப்பட்ட 1 ஏக்கர் 80 செண்டு நிலம் ஆதியில் யாருக்கு கட்டுப்பட்டது என்றால் இஎம்ஜிசௌந்திராஜன் டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். மேற்படி சொத்து டிரஸ்ட் சொத்து என்பதால் அதை கிரையம் செய்து கொடுப்பதற்கு நீதிமன்றத்தில் அனுமதி வாங்கியுள்ளார்களா என்றால் வாங்கியுள்ளார்கள். அந்த ஆவணங்களை எல்லாம் நான் பார்த்துதான் கிரையம் பெற்றேன். நான் கிரையம் பெறும் முன்பு வில்லங்கம் பார்த்துதான் கிரையம் பெற்றேன். நீதிமன்ற அனுமதி சர்வே எண்.158/1க்கு வாங்கப்பட்டிருந்தது. சர்வே எண்.158/1ல் கட்டுப்பட்ட 1 ஏக்கர் 80 செண்டு நிலம் தற்போது வரை காளீஸ்வரன், சந்திவீரன் வாரிசுதாரர்கள் மற்றும் எனது அனுபவத்தில் உள்ளது. மேற்படி 1 ஏக்கர் 80 செண்டு நிலத்திற்கும், இந்த வாதிகள் கருணாநிதி வகையறாவிற்கும் எந்த சம்பந்தமும்கிடையாது என்றால் சரிதான்.